செ.வெ.எண்:30 நாள்:18.03.2021

# தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021 நடைபெறவுள்ளதைத் தொடர்ந்து, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு பொதுப்பார்வையாளர்களை இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

## மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தகவல்.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021 நடைபெறவுள்ளதைத் தொடர்ந்து, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 51.ஊத்தங்கரை (தனி), 52.பர்கூர், 53.கிருஷ்ணகிரி, 54.வேப்பனஹள்ளி ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகளுக்கும் 2 பொதுபார்வையாளர்களை இந்திய தேர்தல் ஆணையத்தால் கீழ்கண்டவாறு நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

| வ. எண் | தொகுதியின் பெயர் | பார்வையாளர்கள் விபரம் | பார்வையாளர்கள் சந்திக்கும் முகவரி | பார்வையாளர் நேரம் | கைபேசி எண் |
|---|---|---|---|---|---|
| 1. | 51.ஊத்தங்கரை (தனி) | திரு.பி.டி.பல்சானா இஆப., | அறை எண்: 04, அரசு விருந்தினர் மாளிகை, கிருஷ்ணகிரி. | காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை | 7010283768 |
| 2. | 52.பர்கூர் | | | | |
| 3. | 53.கிருஷ்ணகிரி | திரு.பார்த்த சாரதி சென்ஷர்மா இஆப., | அறை எண்: 07, அரசு விருந்தினர் மாளிகை, கிருஷ்ணகிரி. | | 9080479104 |
| 4. | 54.வேப்பனஹள்ளி | | | | |

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள 6 சட்டமன்ற தொகுதிகளுக்கும் ஒன்றிணைந்து காவல்துறை பார்வையாளராக திரு.சுனில் பாஸ்கர் இகாப., (கைபேசி எண்: 9006821004) அவர்கள் இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமனம் செய்து உத்தரவு வரப்பெற்றுள்ளது.

எனவே, பொதுமக்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் ஆகியோர் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குட்பட்ட 51.ஊத்தங்கரை (தனி), 52.பர்கூர், 53.கிருஷ்ணகிரி, 54.வேப்பனஹள்ளி ஆகிய 4 சட்டமன்ற தொகுதிகளின் தேர்தல் பணிகள் தொடர்பான புகார்கள் ஏதும் இருப்பின் சம்மந்தப்பட்ட தேர்தல் பார்வையாளர்களின் முகாம் அலுவலகத்தில் நேரடியாகவும், மேற்குறிப்பிடப்பட்டுள்ள கைபேசி எண்கள் வாயிலாகவும் தெரிவிக்கலாம். மேலும், இவர்களைத் தொடர்ந்து ஏனைய தேர்தல் பார்வையாளர்களும் வருகை புரிந்து தேர்தல் தொடர்பான கண்காணிப்பு பணியில் ஈடுபடவுள்ளனர் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி**